

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம், அவரது இல்லத்தில், விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி, தமது 50வது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்கள் உடன் உள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.8.2024) முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவர் என். கண்ணையா அவர்கள் சந்தித்து ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) இடைநுழைவு ஆட்சேர்ப்பு அறிவிப்பைத் திரும்பப் பெற நடவடிக்கை மேற்கொண்டு, சமூக நீதியைப் பாதுகாத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.



### நீலகிரி மாவட்டத்தில் முப்பெரும் விழா!

# கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக. 23-

நீலகிரி மாவட்டத்தில் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்க மாவட்டக் கழகம் முடிவு செய்துள்ளது.

நீலகிரி மாவட்ட திமுக கூட்டம் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் போஜன் தலைமையில் கழக தேர்தல்பணி செயலாளரும், சுற்றுலாத் துறை அமைச்சருமான கா.ராமசந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் அனைவரையும் வரவேற்றார்.

கழக துணை பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், காசிலிங்கம், திராவிட மணி, ராஜு, செந்தில் ரங்கராஜ், மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத்அலி, பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், பிரேம்குமார், பீமன், சிவானந்த ராஜா, சுஜேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, பில்லன், தொரை, ராஜேந்திரன், மோகன்குமார், ராஜா, செல்வம், உதயதேவன், அமிர்தலிங்கம், வீரபத்திரன், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், சதீஷ்குமார், நடராஜன், முத்து, சுந்தர்ராஜ், ரமேஸ்குமார், சஞ்சீவ்குமார், காளிதாஸ், சின்னவர், சுப்ரமணி, மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம்சசிகுமார், கோமதி, ராஜா, காந்தல் ரவி, எல்கில் ரவி, ஜெயந்தி, ஆலன், ராம்குமார், விவேகானந்தன், செல்வராஜ், பவீஷ், வெங்கடேஷ், சீனிவாசன், அன்வர் அப்துல்லா, சிவசுப்ரமணியம், ஜெயகுமார், ரஹமத்துல்லா, ராமசந்திரன், சுரேஷ், உமாநாத், செந்தில்நாதன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நவுபுல், பாபு, நாகராஜ், வினோத்குமார், பத்மநாபன், முரளிதரன், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ராம்குமார், சுனிதா, கீர்த்தனா, மாயன், நகராட்சி தலைவர்கள் வாணீஸ்வரி, பரிமளா, சிவகாமி, சுசிலா, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, ஜெயகுமாரி, கௌரி, சித்ராதேவி, ஹேமமாலினி, வள்ளி, சத்தியவாணி, ராதா, பேபி, பங்கஜம் உட்பட நகர ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக சொற்பொழிவாளர்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்துக்கொண்டனர்.

கூட்ட முடிவில்மாவட்ட துணை ஒன்றிய செயலாளர் லாரன்ஸ் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

**செப்டம்பர் 15 கழக முப்பெரும் விழா**

அய்யா தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது பிறந்தநாள் மற்றும் கழகம் தோன்றிய நாள் ஆகியவற்றை உள்ளடக்கி கழக முப்பெரும் விழாவாக ஒவ்வொரு ஆண்டும் திமுக சார்பில் விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அய்யா தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது தொடராக திகழ்ந்து 49 ஆண்டுகள் திராவிட முன்னேற்ற கழகம் எனும் பேரியகத்தின் தலைவராக செயலாற்றி, உலக தமிழர்களின் அன்பை பெற்ற ஒரே தலைவராய் வாழ்ந்து, 5 முறை தமிழகத்தின் முதல்வராக பொறுப்பு வகித்து, உலக நாடுகள் மத்தியில் தமிழகம் வளர்ச்சிபெற்ற மாநிலமாக திகழவைத்த முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழியில் கழகத்தையும், தமிழகத்தையும் தளபதி அவர்கள் சிறப்புடன் வழி நடத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் எதிர்வரும் செப்டம்பர் 15ம் தேதி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் மற்றும் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு, நீலகிரி மாவட்ட திமுக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலய முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மற்றும் குன்னூர், கோத்தகிரி கொணவக்கரை, பெங்காம் ஆகிய பகுதிகளிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்தும், கழக கொடியேற்றியும் மற்ற நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக பகுதிகளிலும் கழக கொடியேற்றியும், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியை நடத்திட வேண்டுவதோடு, நீலகிரி மாவட்டத்திலுள்ள நகர, ஒன்றிய, பேரூர் கழக பகுதிகளில் எழுச்சியுடன் நடைபெறும், கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதிகளில் உள்ள கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னணியினர், செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்துகொண்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்புற நடைபெற உதவிட அன்புடன் வேண்டுவதோடு, இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும், தொடர்புடைய நகர,ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்திடவும் இக்கூட்டம் கேட்டுக்கொள்வதோடு, நீலகிரி மாவட்டத்தில் முப்பெரும் விழாவை முன்னிட்டு ஒவ்வொரு கிளை கழக பகுதிகளிலும் கழக கொடியேற்று விழா நிகழ்ச்சிகள், ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகளை சிறப்புடன் நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, கழக அரசின் மூன்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழா ஆகியவை உள்ளடக்கி நீலகிரி மாவட்டத்தில் உள்ள கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை நீலகிரி மாவட்ட தி.மு.க., சார்பில் சிறப்புடன் நடத்திட ஏற்பாடுகள் செய்யபட்டு உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டு, கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிகளையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பித்திட கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர்களின் எழச்சி நாயகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அழைத்து நிக ழ்ச்சியை சிறப்பிப்பது எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை!



கடந்த 17.08.2024ம் தேதி அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களுக்கான பொது உறுப்பினர்கள் கூட்டம் முதற்கட்டமாக கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி நடைபெறும். பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| தேதி | நேரம் | ஒன்றியம் | இடம் |
|---|---|---|---|
| 23.08.2024 | மதியம் 12.00 | பொன்னமராவதி வடக்கு, பொன்னமராவதி தெற்கு மற்றும் பொன்னமராவதி பேரூர் | பொன்னமராவதி மீனாட்சி மண்டபம் |
| 23.08.2024 | மாலை 4.00 | திருமயம் வடக்கு, திருமயம் தெற்கு | திருமயம் AKP திருமண மஹால் |
| 23.08.2024 | மாலை 6.00 | அறந்தாங்கி கிழக்கு, அறந்தாங்கி மேற்கு | ஆவணத்தான்கோட்டை SPM மண்டபம் |
| 24.08.2024 | காலை 10.00 | ஆவுடையார்கோவில் வடக்கு, ஆவுடையார்கோவில் தெற்கு | TRP திருமண மண்டபம் |
| 25.08.2024 | பிற்பகல் | ஆலங்குடி தொகுதி | |
| 28.08.2024 | காலை 10.00 | மணமேல்குடி வடக்கு | வசந்த மண்டபம் |
| 28.08.2024 | நண்பகல் 12.00 | மணமேல்குடி தெற்கு | கோட்டைப்பட்டினம், நிஷா மண்டபம் |

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.



உதகையில் நடைபெற்ற நீலகிரி மாவட்ட திமுக கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., சிறப்புரையாற்றினார். உடன் நீலகிரி மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### ஈரோடு மாவட்டம் - புஞ்சைதுறையம்பாளையம் கல்குவாரியில் நிகழ்ந்த

# வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 23 -

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், புஞ்சைதுறையம்பாளையம் கிராமத்திலுள்ள கல்குவாரியில் நிகழ்ந்த வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், வாணிபுத்தூர் உள் வட்டம், புஞ்சை துறையம்பாளையம் ‘அ’ கிராமத்தில் அனுமதியின்றி செயல்பட்டுவந்த தனியார் கல்குவாரியில் 20.8.2024 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த வெடிவிபத்தில் கல் உடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கோபிசெட்டிபாளையம் வட்டம், அயலூர் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் (வயது 50) த/பெ. ராஜீ மற்றும் கர்நாடக மாநிலம், சாம்ராஜ்நகர் மாவட்டம், மாட்டவள்ளி பகுதியைச் சேர்ந்த அஜீத் (வயது 27) த/பெ. ஆறுமுகம் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் வீடு, வீடாகச் சென்று தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ .ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், ஆக. 23 -

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்,நீக்குதல், முகவரி மாற்றம் செயத்லஇந்திய தேர்தல் ஆணைய அறிவுரையின் படி 01.01.2025 என்ற நாளை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பாக சிறப்பு திருத்தப்பணிகள் 20.08.2024 முதல் துவங்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.

இச்சிறப்பு சுருக்க முறை திருத்த நடவடிக்கையினை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் 06.01.2025 அன்று வாக்காளர் பட்டியல் வெளியிட பல்வேறு முன்திருத்த நடவடிக்கைகளுக்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, 01.01.2025ஐ தகுதியேற்பு நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த முகாம்கள் நடத்தி எதிர்வரும் 06.01.2025ல் வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

வாக்காளர் பட்டியல் தொடர்திருத்த பணியின் முதல் நடவடிக்கையாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குசாவடி மைய பகுதியில் வசித்துவரும் அனைத்து வாக்காளர்களின் விபரங்களை ஆகஸ்ட் 20 முதல் அக்டோபர் 18 வரை வீடு, வீடாக சென்று சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளார்கள். கள ஆய்வின் போது ஒவ்வோரு குடும்பத்தில் உள்ள மொத்த உறுப்பினர்கள் அவர்களில் எவ்வளவு பேர் வாக்காளர்களாக பதிவு செய்துள்ளார்கள் மற்றும் ஒவ்வொரு குடும்பத்திலும் விடு பட்டுள்ள வாக்காளர்களை கண்டறிந்து சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த சரிபார்ப்பு பணியானது வாக்குசாவடி நிலை அலுவலர்கள் அனைவரும் தேர்தல் ஆணையத்தால் புதியதாக அறிமுகப்படுத்தியுள்ள செயலி வழியாக (BLO APP) மேற்கொள்ள உள்ளனர்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லம் தேடி வரும் போது வாக்காளர்கள் தங்களது பெயர், வயது, புகைப்படம், முகவரி திருத்தம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள தெரிவிக்கலாம். மேலும், வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்க்கவும், இறந்துபோன அல்லது நிரந்தரமாக புலம் பெயர்ந்த நபர்களை இனம் கண்டு நீக்கம் செய்திடலாம்.

எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள் என அனைலரும் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் இணைந்து உடனடியாக வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆலவயல் சுப்பையா**
**ஆகஸ்ட் 23 (2020)**



**கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**திருமயம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும், மாவட்ட திருக்கோவில்கள் அறங்காவலர் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**